


**01.03.2025**

## தலைப்பு செய்திகள்

1. வேளாண் துறையை வலுப்படுத்தி, வளப்படுத்துவதை இலக்காக கொண்டு மத்திய அரசின் நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. பிரதமரின் மக்கள் மருந்தக திட்டத்தின் பலன்கள் குறித்து பொதுமக்கள் நண்பர்களிடையே உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வலியுறுத்தியுள்ளார்.

3. தமிழக அரசு பள்ளிகளில் முதலாம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கையை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று சென்னையில் தொடங்கி வைத்தார்.

4. வளிமண்டல கீழடுக்கு சுழற்சியால் கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி தூத்துக்குடி விருதுநகர் ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. துபாய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் யூக்கி பாம்ப்ரி, அலெக்ஸ் பாப்ரின் இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

***********

### பிரதமர் Post budget

வேளாண் பிரிவை மேலும் வலுப்படுத்தி, வளப்படுத்துவதை இலக்காக கொண்டு மத்திய அரசின் வரும் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி தொடர்பான பட்ஜெட்டிற்கு பிந்தைய ஆலோசனை கூட்டத்தில் புதுதில்லியில் இன்று காணொலி மூலம் உரையாற்றிய அவர் வளர்ச்சி அடைந்த இந்தியா பாதையில் முன்னேறி செல்லும் இந்தியாவின் தீர்மானம் உறுதியானது என்று குறிப்பிட்டார்.

விவசாயிகள் வளத்துடன் ஆளுமை பெறும் வகையில் நம் நாட்டை கட்டமைப்பதில் மத்திய அரசு முனைப்புடன் பணியாற்றி வருவதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

வளர்ச்சியின் முதல் உந்து சக்தியாக வேளாண்மை கருதப்படுவதாக கூறிய பிரதமர் விவசாயிகளுக்கு அரசு பெருமைமிகு இடத்தை வழங்கியிருப்பதாக குறிப்பிட்டார்.

வேளாண் மேம்பாடு கிராமங்களின் வளம் ஆகிய இரண்டு முக்கிய இலக்குகளை கொண்டு அரசு முன்னேறி செல்வதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் தானிய பெருக்க திட்டமான தன தான்ய கிரிஷி யோஜனா திட்டத்தின் கீழ் வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள 100 மாவட்டங்களில் வளர்ச்சிக்கு முன்னுரிமை அடிப்படையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று கூறினார்.

மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை உறுதி செய்வது குறித்து முக்கிய ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழகத்தில் தூத்துக்குடி, தேனி, நீலகிரி, ஈரோடு, கன்னியாகுமரி, தஞ்சை திருச்சி திருநெல்வேலி, கடலூர் தர்மபுரி, நாமக்கல் திருவண்ணாமலை மாவட்டங்களை சேர்ந்த மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர்கள், விவசாயிகள், சுய தொழில் பயிற்சியாளர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

பிரதமரின் தன தான்ய க்ரிஷி யோஜனா திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக முன்னோடி வங்கி மேலாளரும், வேளாண் நிதியுதவி ஊக்கமளிப்பதாக விவசாயி ஒருவரும் தங்களது கருத்துக்களை தெரிவிக்கையில்

.. **வாய்ஸ்** ..

***********

**பிரதமர் - ஊடக நிகழ்ச்சி**

முன்னதாக புதுதில்லியில் தனியார் ஊடக நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய பிரதமர் இந்திய ஊடகங்களின் ஆக்கப்பூர்வமான செய்திகளுக்கு உலக அளவில் வரவேற்பு இருப்பதாக பெருமிதம் தெரிவித்தார்.

பிரயாக்ராஜில் நடைபெற்ற மகா கும்பமேளாவில் கோடிக்கணக்கானோர் பங்கேற்று புனித நீராடியது நமது பாரம்பரியம் தொடர்பான உலகளாவிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

உள்ளூர் உற்பத்தி பொருட்களை இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக நாடுகளிலும் பிரபலமாகி வருவதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நம் நாடு உலகின் புதிய தொழிற்சாலையாக உருவெடுத்துள்ளது என்று மகிழ்ச்சி தெரிவித்த அவர் உலக சக்தியாக நம் நாடு வளர்ந்து வருவதாக பெருமிதம் தெரிவித்தார்.

***********

**ஜக்தீப் தன்கர்**

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்ட வளர்ச்சி காரணமாக இந்தியா உலக அளவில் அனைவராலும் விரும்பும் நாடாக உருவெடுத்துள்ளது என்று குடியரசு துணைதலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் இன்று நடைபெற்ற சர்வதேச தீர்வாயம் இந்தியாவின் அணுகுமுறை என்ற தலைப்பிலான நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர்

வளர்ச்சியின் கனிகளை மக்கள் ருசி பார்த்ததால் மேலும் ஏராளமானவற்றை எதிர்பார்ப்பதாக எடுத்துரைத்தார்.

இதனால் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிபெறும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

உலக அளவில் இந்தியா அனைத்து துறைகளிலும் முன்னோடி நாடாக உருவாகிவருவதால் சர்வதேச தீர்வாயமாக இந்தியா வளர்ச்சிபெற வேண்டும் என்றும் விருப்பம் தெரிவித்தார்.

***********

**ஜே.பி.நட்டா**

நாட்டு மக்களுக்கு குறைவான விலையில் தரமான மருந்துகளை வழங்குவதை உயர் முன்னுரிமையாக கொண்டு அரசு செயல்படுவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பிரதமரின் மக்கள் மருந்தக வாகன சேவையை இன்று தொடங்கிவைத்த அவர் புரட்சிகரமான இந்த திட்ட பலன்களை அனைவரும் பெற பொதுமக்கள் தங்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

இன்றுமுதல் ஒருவார காலம் பிரதமரின் மக்கள் மருந்தக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

தரமான சுகாதார சேவைகளை அனைவருக்கும் கொண்டு செல்லும் ஒரு பகுதியாக நாட்டின் பல்வேறு இடங்களில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மருந்தகங்கள் செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

***********

**இணையதள கூட்டம்**

பிரதமரின் கதி ஷக்தி, சாலை மேம்பாட்டு திட்ட பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்கான இணையதள திட்டமிடல் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெற்றது.

வர்த்தக மேம்பாடு மற்றும் உள்நாட்டு வர்த்தகத்தின் இணை செயலர் திரு.இ.ஸ்ரீனிவாஸ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சாலை, ரயில்வே, தகவல் தொழில்நுட்பம், மெட்ரோ ரயில் திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

பன்முக இணைப்புகள், தளவாட போக்குவரத்தை வலுப்படுத்துவது போன்றவை முன்னுரிமை அடிப்படையில் பிரதமரின் கதி ஷக்தி தேசிய பெருந்திட்டத்தோடு இணைக்கப்பட்டு அதனை முன்னெடுத்து செல்வது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்நடவடிக்கைகள் பயண நேரத்தை குறைத்து குடிமக்களுக்கான சமூகபொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு வழிகோலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

***********

**சக்கர நாற்காலி தினம்**

நாட்டில் விமான, ரயில் நிலையங்கள் அரசு அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக பாதை வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக மத்திய சமூக நீதி அதிகாரம் அளிப்புத்துறை செயலர் திரு.ராஜேஷ் அகர்வால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சக்கர நாற்காலி தினம் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி புதுதில்லியில் நடைபெற்ற சுகமய யாத்ரா நிகழ்ச்சியில் பேசிய அவர் பொதுவெளிகளில் மாற்றுத்திறனாளிகளை ஒருங்கிணைப்பதற்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

***********

**பாஸ்போர்ட்**

நாட்டில் பாஸ்போர்ட் பெறுவதற்கான விதிமுறைகளில் மாற்றங்கள் செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி 2023 அக்டோபர் 1ம் தேதி மற்றும் அதற்கு பின் பிறந்தவர்களுக்கு பிறப்பு சான்றிதழ் மட்டுமே வயதிற்கான ஆதாரமாக ஏற்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 2023ஆம் அக்டோபர் மாதத்திற்கு முன் பிறந்தவர்கள் Pan Card ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, பள்ளி மாற்று சான்றிதழ் உள்ளிட்டவற்றை ஆவணங்களாக பயன்படுத்தலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

***********

**மாணாக்கர் சேர்க்கை**

தமிழகத்தில் அரசு பள்ளிகளில் முதலாம் வகுப்பு மாணாக்கர் சேர்க்கை இன்று தொடங்கியது.

சென்னை ராயப்பேட்டை அரசு பள்ளியில் முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் மாணாக்கர் சேர்க்கையை தொடங்கிவைத்தார்.

தமிழகத்தில் 24 ஆயிரத்து 350 தொடக்க பள்ளிகளில் மாணாக்கர் சேர்க்கைக்கான அனைத்து பணிகளும் தயார்நிலையில் உள்ளதாக கல்வித்துறை தெரிவித்துள்ளது.

சேலம் மாநகராட்சி மணக்காடு தொடக்கப்பள்ளியில் ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி குழந்தையின் கைபிடித்து எழுதி முதல் பாடத்தை பயிற்றுவித்தது குறிப்பிடத்தக்கது.

இம்மாவட்டத்தில் நடப்பாண்டு 25 ஆயிரம் மாணாக்கரை அரசு பள்ளிகளில் முதல்வகுப்பில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.கபீர் தெரிவித்துள்ளார்.

**வாய்ஸ்**

***********

**முதலமைச்சர் பிறந்தநாள்**

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலினின் 72ஆவது பிறந்த நாளை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங், தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி உள்ளிட்டோர் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

பிஜேபி மாநில தலைவர் திரு.அண்ணாமலை, காங்கிரஸ் கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு.ராகுல் காந்தி உள்ளிட்டோரும் முதலமைச்சரை வாழ்த்தியுள்ளனர்.

***********

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில் பல்துறை வளர்ச்சிக்கு** 15 ஆயிரத்து 549 கோடி ரூபாய் வங்கி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

வேளாண், சிறு குறு நடுத்தர தொழில், கல்வி, வீட்டுவசதி மேம்பாடு உள்ளிட்டவை இதில் அடங்கும்.

**நாமக்கல் மாவட்டம் பாச்சல் பகுதியில் உள்ள** தனியார் தொழில்நுட்ப கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் இன்று நடைபெறுகிறது.

200க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் பங்கேற்றுள்ளன.

**அரியலூர் பாரத ஸ்டேட் வங்கியின் ஊரக சுய** வேலை வாய்ப்பு பயிற்சி பெற விரும்பும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

Photography, video graphy, இருசக்கர வாகன பழுது நீக்கம் பயிற்சிகளுடன் தொழில் தொடங்க கடனுதவியும் வழங்கப்படும்.

**தமிழகத்தில் பிளஸ் டூ பொதுத்தேர்வுகள் நாளை மறுநாள் தொடங்க** உள்ள நிலையில் திருச்சி மாவட்டத்தில் 220 பறக்கும் படையினர் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 131 தேர்வு மையங்களில் 32 ஆயிரத்திற்கும் அதிகமான மாணாக்கர் தேர்வு எழுதுகின்றனர்.

**ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் மைசூர்** தேசிய நெடுஞ்சாலையில் வாகன சோதனையின்போது காய்கறி லாரியில் தமிழகத்திற்கு கடத்தி கொண்டுவரப்பட்ட ஒன்றரை டன் குட்கா பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

**அரியலூர் ரயில் நிலையத்தில் 77 லட்சம் ரூபாய்** ஹவாலா பணம் இன்று பறிமுதல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டு திருச்சி வருமான வரி துறையிடம் ஒப்படைக்கப்பட்டதாக ரயில்வே காவல்துறை தெரிவித்துள்ளது.

***********

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக கன்னியாகுமரி திருநெல்வேலி தென்காசி தூத்துக்குடி விருதுநகர் ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழகத்தின் அநேக இடங்களிலும், வட தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.

***********

**திருவாரூர் மழை**

திருவாரூர் மாவட்டத்தில் இன்றுகாலை முதல் பலத்த மழை பெய்துவருகிறது.

திருத்துறைபூண்டி மன்னார்குடி நீடாமங்கலம் உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் நேற்றிரவு முதல் மழை நீடிப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

தஞ்சை மாவட்டத்தில் ஒரத்த நாடு பட்டுக்கோட்டை தென்னமநாடு ரெட்டிபாளையம் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இரண்டாவது நாளாக இன்றும் கன மழை தொடர்வதால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல் நிலவுகிறது.

***********

**குற்றாலம்**

குற்றால அருவிகளில் திடீர் வெள்ளபெருக்கு காரணமாக சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**டென்னிஸ்**

துபாய் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் பாப்ரின் இணை - இங்கிலாந்தின் ஹென்ட்ரி பேட்டன் இணையை எதிர்கொள்கிறது.

***********

**பேட்மிண்டன்**

ஜெர்மன் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் கலப்பு இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் துருவ் கபிலா – டனிஷா கிராஸ்டோ இணை – இந்தோனேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

**கிரிக்கெட்**

ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் கராச்சியில் இன்று தென்னாப்பிரிக்கா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் வெற்றி பெற்றாலோ அல்லது ட்ரா செய்தாலோ தென்னாப்பிரிக்க அரையிறுதிக்குள் நுழைய முடியும்.

துபாயில் நாளை நடைபெறும் ஆட்டத்தில் இந்தியா நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**